விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 063 வள்ளுவர் ஆண்டு 2056 மாசி 08 வியாழக்கிழமை (20.02.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







துப்பாக்கிச் சூடு நடத்திய சந்தேக நபர்


துப்பாக்கிதாரிக்கு உதவிய பெண்



கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கைத்துப்பாக்கி


துப்பாக்கியை மறைத்து கொண்டு வந்த சட்டப்புத்தகம்



## கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள்

# பாதாள குழுத் தலைவர் சுட்டுப் படுகொலை


நீதிமன்றத்தில் சுடப்பட்டு உயிரிழந்த சஞ்சீவ

- நீதிமன்றின் எதிரிக்கூண்டில் வைத்தே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.
- சட்டத்தரணிபோல வேடமணிந்து வந்த முன்னாள் இராணுவச் சிப்பாயே பிரதான சூத்திரதாரி.
- சட்டப் புத்தகத்தில் மறைத்து எடுத்து வரப்பட்ட கைத்துப்பாக்கி.
- சட்டத்தரணிபோல் வேடமணிந்த பெண்ணே ஆயுதம் வழங்கினார்.

(15ஆம் பக்கம் பார்க்க)


சட்டத்தரணி வேடமணிந்து வந்த துப்பாக்கிதாரி


## காலியில் துப்பாக்கிச் சூடு

# தந்தை, மகன், மகள் உயிரிழப்பு

(காலி)

காலி, மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடேவத்த சந்திக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் தந்தை, மகன் மற்றும் மகள் என ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர்.

15



## துப்பாக்கிச் சூடு எதிரொலி

# சட்டத்தரணிகளை சோதனைக்கு உட்படுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

நீதிமன்ற வளாகத்திற்கு வருகை தரும் சட்டத்தரணிகள் சோதனைக்குட்படுத்தப்படுவதில்லை எனவும், நீதிமன்றத்திற்கு வருகை தரும் ஒவ்வொரு சட்டத்தரணியையும் சோதனைக்குட்படுத்த உதவுமாறு சட்டத்தரணிகள் சங்கத்திடம் கேட்டுக்கொள்வதாகவும் பதில் பொலிஸ்மா அதிபர்

15

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

# கட்டுப்பணங்களை மீளச் செலுத்த நடவடிக்கை

(கொழும்பு)

2023ஆம் ஆண்டில் நடத்தப்படவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப் பணத்தைச் செலுத்தியவர்களுக்கு அந்தப் பணத்தை மீண்டும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பணத்தை வைப்புச் செய்தமைக்

15

## தொழிலதிபர்

# எஸ்.பி.சாமி காலமானார்



15

# நீதிமன்றினுள் துப்பாக்கிச் சூடு முன்னாள் சிப்பாய் கைது

(கொழும்பு)

புதுக்கடை நீதிமன்றத்திற்குள் வைத்து கணேமுல்ல சஞ்சீவவை சுட்டுப்படுகொலை செய்த பிரதான சந்தேகநபர், புத்தளம் - பாலாவிப் பகுதியில் வைத்து பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மொஹமட் அஸ்மான் ஷெரிப்தீன் என்ற 34 வயதான நபரே இவ்

15




நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் கொடுக்காத கலாசாரத்தை பொதுமக்கள் உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(கொழும்பு)

இலஞ்சம் கொடுக்காத கலாசாரத்தை பொதுமக்கள் உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பான கருத்தாடல் நிகழ்வொன்று, நேற்று கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது கடன் மறுசீரமைப்பு மூலம் கிடைத்த மூன்று வருட சலுகைக் காலத்தை தாம் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளதாகவும், இதன் மூலம் 2028 ஆம் ஆண்டுக்குள் சரியான பொருளாதார முகாமைத்துவத்தின் மூலம் கடன் திருப்பிச் செலுத்தும் திறனை அடைய அரசாங்கம் எதிர்பார்க்கிறது எனவும்,

வங்குரோத்தடைந்த ஒரு நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பல உலக நாடுகளுக்கு ஒரு தசாப்தம் வரை சென்றாலும்,

இலங்கை அதிலிருந்து மீள்வதற்கு ஒரு தசாப்தத்திற்கும் குறைவான காலமே செல்லும் என்று கணிப்பிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் அரச வருவாயை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15.1 சதவீதமாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் நிதியை செலவிடுவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் எனவும், பொருளாதாரத்தை விஸ்தரித்து பொருளாதாரத்தை கிராமங்களுக்குக் கொண்டு செல்வதன் மூலமும், குடிமக்களைப் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதற்கும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும் கைத்தொழில்த் துறைக்கு உதவுவதே அரசாங்கத்தின் நோக்கம் எனவும், உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதன் மூலம் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்குவதே அரசாங்கத்தின் குறிக்கோள் எனவும், கிராமப்புற வறுமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக, கல்வித்துறைக்கு இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் இதன் மூலம் பாடசாலைக் கட்டமைப்பில் மனித மற்றும் பௌதீக வளங்களை மறுசீரமைக்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன் இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அரச சேவைக்காக அதிக செலவு மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும், எனவே, அரச நிறுவனங்களின் செலவினங்களை மறுபரிசீலனை செய்ய எதிர்பார்க்கப்படுகிறது அரசியல் அதிகாரத்தை ஊழல் இல்லாத இடமாக தாம் மாற்றியுள்ளதாகவும் எனவே, இலஞ்சம் கொடுக்காத கலாசாரத்தை உருவாக்குவது குடிமக்களின் பொறுப்பாகும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ம-7)

## கஜேந்திரன், வேலன் சுவாமிகளுக்கு பலாலி பொலிஸார் அழைப்பாணை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி கடந்த பௌர்ணமி தினத்தில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படிருந்தது.

இந்நிலையில் போராட்டம் தொடர்பாக வாக்குமூலம் அளிக்க முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தவத்திரு வேலன் சுவாமிகள் ஆகியோருக்கு பலாலி பொலிஸாரால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த அழைப்பாணையில் பலாலி பொலிஸ் நிலையத்திற்கு இன்று வியாழக்கிழமை (20) நண்பகல் 12 மணிக்கு இருவரையும் ஆஜராகுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,33)

## சட்டத்தரணிகள் சங்க தலைவராக ரஜீவ் தெரிவு

(கொழும்பு)

2025-2026 ஆம் ஆண்டிற்கான இலங்கைச் சட்டத் தரணிகள் சங்கத்தின் 29வது தலைவராகச் சட்டத்தரணி ரஜீவ் அமரசூரிய தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது போட்டி வேட்பாளர் சட்டத்தரணி சுனில் அபேரத்னவை விடப் பெரும்பான்மையைப் பெற்றுள்ளார்.

உத்தியோகபூர்வ முடிவுகளின்படி, ரஜீவ் அமரசூரிய 4,497 வாக்குகளைப் பெற்றார்.

அவருக்கு எதிராகப் போட்டியிட்ட வேட்பாளர் சுனில் அபேரத்ன 1,667 வாக்குகளைப் பெற்றார்.

ரஜீவ் அமரசூரிய 2,830 வாக்குகள் பெரும்பான்மையுடன் வெற்றியாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 - 06 - 1930



மறைவு
19 - 02 - 2025

### சண்முகராசா இராசம்மா

குப்பிழான் வடக்கு குப்பிழானைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராசா இராசம்மா அவர்கள் **19.02.2025** நேற்றுப் புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற தம்பிராசா - பறுவதம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சண்முகராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம், கந்தையா, சுப்பையா, செல்லையா, சின்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நேசராணி, திலகவதி, இராஜராஜேஷ்வரி, சிவச்சந்திரா, தங்கராசா, விஜயலக்சுமி, காலஞ்சென்ற கனகராசா ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 21.02.2025 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் குப்பிழான் காடாகரம்பை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குப்பிழான் வடக்கு,
குப்பிழான்.

தகவல் : பிள்ளைகள்,
[illegible]
பேரப்பிள்ளைகள்

(868)


# உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

**உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.**

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

**076 097 3127**

**021 221 7603**

/ - 076 636-3378

E.mail: Valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களை வாகனங்களுக்குள் விட்டுச் செல்ல வேண்டாம்

## வெப்பமான காலநிலை குறித்து வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்து



**(கொழும்பு)**

**நாட்டில் தற்போது காணப்படும் வெப்பமான காலநிலை காரணமாக வாகனங்களுக்குள் சிறுவர்களை விட்டுச் செல்வதைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.**

வடக்கு, வடமத்திய, வடமேல், மேல், தென் மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களிலும் வெப்பநிலை அதிகமாக இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, மேற்கூறிய பகுதிகளில் வெப்பம், மனித உடலால் உணரப்படும் "எச்சரிக்கை நிலை" வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் சிறு குழந்தைகள் தொடர்பில் அவதானமாக இருப்பதுடன், முடிந்த வரையில் வெள்ளை அல்லது வெளிர் நிற, இலகுரக ஆடைகளை அணியுமாறும் போதுமான அளவு தண்ணீர் குடிக்குமாறும் அறிவுறுத்தியுள்ளது. (நி-8)

# மதுபானம், சிகரெட் விலைகள் அதிகரிக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலை அதிகரிக்கப்படாது என மதுவரித் திணைக்களத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டிருந்தன.

அந்த வகையில், வரவு செலவுத் திட்டத்தில் மதுபானம் மற்றும் சிகரெட் விலைகள் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலை மீண்டும் அதிகரிக்கப்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 11ஆம் திகதி மதுபான வகைகள் லீற்றர் ஒன்றின் விலை 6 வீதத்தினாலும் சிகரெட் வகைகளின் விலை 5 முதல் 10 ரூபாவினாலும் உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# தேசிய பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும்

## தயாசிறி வலியுறுத்து



(கொழும்பு)

அரசாங்கம் தேசிய பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.


கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பாராளுமன்றில் கருத்துத் தெரிவித்த போதே தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது சட்டத்தரணி போன்று ஆடை அணிந்து வந்த ஒருவரே குறித்த துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளார். நீதிமன்றத்துக்குள்ளேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கும் சட்டத்தரணிகளுக்கும் பாதுகாப்பு இல்லாத நிலைமையே காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இது சிறிய விடயம் அல்ல எனவும், இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாமல் விட்டால் பாரிய விளைவை சந்திக்க நேரிடும் என்றும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (நி-8)

# ஓடும் ரயிலில் செல்ஃபி எடுக்க முயன்றவர் மரணம்



(பதுளை)

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த ரயிலில் இருந்த ரஷ்யப் பெண் ஒருவர் செல்ஃபி எடுப்பதற்காக ரயில் கதவின் வெளிப்புறம் சென்ற வேளையில் தலையில் கல் மோதி உயிரிழந்துள்ளார்.

53 வயதுடைய ரஷ்யப் பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஹாலிஎல பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட அமுனுவெல்பிட்டிய பகுதியில் நேற்று புதன்கிழமை காலை 9.10 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ரஷ்ய பெண் தனது குடும்பத்தினருடன் நுவரெலியாவில் உள்ள சுற்றுலா விடுதியொன்றுக்குச் சொந்தமான சொகுசு பேருந்தில் பதுளைக்குச் சென்றுள்ள நிலையில் எல்ல பிரதேசத்தைப் பார்வையிடுவதற்காக ரயிலில் பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்ட போது, பெண் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹாலிஎல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)

## நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில்

# நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாட்டின் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தலில் இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்பிற்குக் குறைந்தளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் எங்கும் சுதந்திரமாகப் பயணிக்க முடியும் எனவும் அரசாங்கம் தெரிவித்தது.

இவ்வாறு அரசாங்கம் குறிப்பிட்டு ஓரிரு நாட்களில் கொலைச் சம்பவங்களே அரங்கேறியுள்ளன என நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பத்தை சுட்டிக்காட்டி நாமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றியிருந்தார்.

மேலும் நேற்று நீதிமன்றத்திற்குள் நீதிபதியின் முன்பே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டினார்.

உயிரிழந்தவரின் நடத்தை எவ்வாறு இருப்பினும் நீதிமன்றத்திற்குள் இவ்வாறான அசம்பாவிதங்கள் அரங்கேறுவது பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடு என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேபோல் அண்மையில் மன்னார் நீதிமன்றத்துக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தையும் நினைவுபடுத்தியிருந்தார்.

இவ்வாறான சூழலில் எவ்வாறு நாட்டிற்கு முதலீட்டாளர்களை அரசாங்கம் அழைக்க முடியும் இவ்வாறான கொலைச் சம்பவங்கள் அரங்கேறுவது நாட்டின் சுற்றுலாத்துறையையும் பாதிக்கும் எனக் குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அயர்லாந்துக்கு எதிரான தொடரை வென்றது ஜிம்பாப்வே

கடைசி ஒருநாள் போட்டியில் ஜிம்பாப்வே 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அயர்லாந்துக்கு எதிரான தொடரை ஜிம்பாப்வே 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி ஜிம்பாப்வேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா 1 வெற்றி பெற்ற நிலையில் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கிடையிலான 3 ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி ஹராரே மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஜிம்பாப்வே பந்து வீச்சை தேர்வு செய்தது.




அதன்படி முதலில் பட்டிங் செய்த அயர்லாந்து அணி பால்பிர்னி 64, ஹாரி டெக்டர் 51 மற்றும் டக்கர் 62 ரன்கள் ஆகியோரின் அரைசதத்தின் உதவியுடன் 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 240 ரன்கள் அடித்தது. ஜிம்பாப்வே தரப்பில் ந்கரவா மற்றும் டிரெவர் க்வந்து தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

இதனையடுத்து ஜிம்பாப்வே அணியின் தொடக்க வீரர்களாக பிரையன் பென்னட்- பென் குர்ரான் ஆகியோர் களமிறங்கினர். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பிரைன் பென்னட் 48 ரன்னில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 124 ரன்கள் எடுத்தது.

இதனைத் தொடர்ந்து பென் கரண் உடன் கப்டன் கிரெய்க் எர்வின் ஜோடி சேர்ந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர். இருவரும் அரை சதம் கடந்து அசத்தினர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த பென் கரண் சதம் விளாசினார்.

இறுதியில் ஜிம்பாப்வே அணி 39.3 ஓவரில் 246 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-1 என்ற கணக்கில் ஜிம்பாப்வே அணி கைப்பற்றியது. இரு அணிகளுக்கு இடையேயான ரி-20 தொடர் எதிர்வரும் 22 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (6-8)

## சின்னருக்கு சாதகமாக தீர்ப்பு டென்னிஸிற்கு நல்லதல்ல-ஜோகோவிச்

சின்னருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கியதால், டபிள்யு.ஏ.டி.ஏ மீது பெரும்பாலான டென்னிஸ் நட்சத்திரங்கள் நம்பிக்கை இழந்து விட்டனர் என ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

உலக ஊக்கமருந்துத் தடுப்பு மையத்தின் (டபிள்யு.ஏ.டி.ஏ) சமீபத்திய செயற்பாடுகள் குழப்பமாக உள்ளன. ஊக்கமருந்து விவகாரத்தில் கடந்த 2022 இல் உலகின் முன்னாள் "நம்பர்-1" வீராங்கனை சிமோனா ஹாலெப்புக்கு 4 ஆண்டு தடை விதிக்கப்பட்டது. பின் 9 மாதமாக குறைக்கப்பட்டது. பிரிட்டனின் தாரா மூர், 18 மாத விசாரணை முடியும் வரை "சஸ்பெண்ட்" செய்யப்பட்டு இருந்தார்.

சமீபத்தில் இதுபோல சர்ச்சையில் சிக்கிய போலந்து வீராங்கனை ஸ்வியாடெக் (1 மாதம்), இத்தாலின் சின்னருக்கு (3 மாதம்) குறுகிய கால தடை விதிக்கப்பட்டது. இதற்கு உலகின் பல முன்னணி நட்சத்திரங்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

தற்போது சின்னர் சம்பவம் போல, ஊக்க மருந்து சர்ச்சையில் சிக்கிய ஸ்பெயினின் பனிச் சறுக்கு வீராங்கனை லாராவுக்கு 6 ஆண்டு தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து கிராண்ட் ஸ்லாம் அரங்கில் 24 பட்டம் வென்ற செர்பியாவின் ஜோகோவிச் கூறியது.

சர்வதேச டென்னிஸ் சங்கம், டபிள்யு. ஏ.டி.ஏ வின் சமீபத்திய செயற்பாடுகளால், வீரர், வீராங்கனைகளிடம் நம்பகத்தன்மை குறைந்து விட்டது. இது டென்னிசிற்கு நல்லதல்ல.

சின்னர் விடயத்தில் எடுக்கப்பட்ட முடிவு குறித்து பலரும் அதிருப்தியில் உள்ளனர். இது ஒருதலைப் பட்சமானது. சிறந்த வீரர், திறமையான வக்கீல்கள் இருந்தால் சாதகமாக தீர்ப்பை மாற்றிவிடலாம் என்பதை இது காட்டுகிறது. சம்பந்தப்பட்ட அமைப்புகள் வெளிப்படையாக செயற்படவில்லை என அவர் கூறியிருந்தார். (6-8)

## ஒருநாள் கிரிக்கெட்டில் இந்தியாவின் சாதனையை முறியடித்த அமெரிக்கா




உலகக் கோப்பை கிரிக்கெட் (50 ஓவர்) தகுதி சுற்றின் ஒரு பகுதியான லீக் போட்டி ஓமனின் அல் அமராட் நகரில் நடந்து வருகிறது.

இதில் அமெரிக்கா - ஓமன் இடையிலான ஒரு ஆட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முதலில் பட் செய்த அமெரிக்கா 35.3 ஓவர்களில் 122 ரன்னில் ஆல்அவுட் ஆனது.

அடுத்து 123 ரன் இலக்கை நோக்கி களமிறங்கிய உள்ளூர் அணியான ஓமன் 25.3 ஓவர்களில் 65 ரன்னில் சுருண்டது. இதனால் அமெரிக்கா 57 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


ஓவர் எதுவும் குறைக்கப்படாமல் முழுமையாக நடந்த ஒரு நாள் போட்டி ஒன்றில் மிகக் குறைந்த ஸ்கோரை இலக்காக நிர்ணயித்து வெற்றி பெற்ற அணி என்ற சாதனையை அமெரிக்கா படைத்துள்ளது.

இதற்கு முன்பு 1985 ஆம் ஆண்டு சார்ஜாவில் நடந்த ஆட்டத்தில் இந்திய அணி பாகிஸ்தானுக்கு எதிராக 125 ரன்களை இலக்காக நிர்ணயித்து எதிரணியை 87 ரன்னில் முடக்கி வென்றதே இற்றை வரையில் சாதனையாக இருந்தது. அந்த 40 ஆண்டு கால சாதனையை அமெரிக்கா முறியடித்தது.

மேலும் ஓமன் தரப்பில் 5 பவுலர்களும் அமெரிக்கா தரப்பில் 4 பவுலர்களும் பந்து வீசினர். இவர்கள் அனைவரும் சுழற்பந்து வீச்சாளர்கள். ஒரு நாள் கிரிக்கெட் வரலாற்றில், முழுமையாக நடந்த ஒரு ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் கூட பந்து வீசாதது இதுவே முதல் நிகழ்வாகும். (6-8)

## தரவரிசையில் கில் முதல் இடம் பாபர் அசாம் பின்னடைவு

### ஐ.சி.சி அறிவிப்பு



சர்வதேச கிரிக்கெட் கமிட்டி ஐ.சி.சி வெளியிட்டுள்ள ஒருநாள் கிரிக்கெட் பட்ஸ்மேன்களுக்கான தரவரிசையில் முதலிடத்தில் இருந்த பாபர் அசாமை பின்னுக்குத் தள்ளி இந்திய தொடக்க வீரர் சுப்மன் கில் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட தர வரிசையின்போது சுப்மன் கில் 2 ஆவது இடம் பிடித்திருந்தார். இங்கிலாந் துக்கு எதிரான கடைசி போட்டியில் சதம் விளாசியதன் மூலம் சுப்மன் கில் 796 புள்ளிகளுடன் முதல் இடத் தை பிடித்துள்ளார். பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்ற முத்தரப்பு போட்டியில் பாபர் அசாம் சிறப்பாக விளையாடவில்லை. இதனால் 776 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்திற்கு சரிந்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான 2 ஆவது போட்டியில் சதம் விளாசிய ரோகித் சர்மா கடந்த வாரம் 3 ஆவது இடத்தில் இருந்தார். இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது போட்டியில் சொற்ப ரன்களில் ஆட்டமிழந்தாலும் 761 புள்ளிகளுடன் அதே இடத்தில் நீடிக்கிறார்.


தென்ஆபிரிக்க வீரர் கிளாசன் 756 புள்ளிகளுடன் ஒரு இடம் முன்னேறி 4 ஆம் இடமும் நியூசிலாந்து வீரர் டேரில் மிட்செல் 2 இடங்களில் முன்னேறி 740 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளனர்.

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி போட்டியில் அரைசதம் அடித்த விராட் கோலி 727 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்தில் நீடிக்கிறார். ஷ்ரேயாஸ் அய்யர் 679 புள்ளிகளுடன் ஒரு இடம் முன்னேறி 9 ஆவது இடத்தை பிடித்துள்ளார். அயர்லாந்து வீரர் டெக்கர் 7ஆவது இடத்தையும் இலங்கை வீரர் அசலங்கா 8 ஆவது இடத்தையும் வெஸ்ட் இண்டீஸ் வீரர் ஷாய் ஹோப் 10 ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டுவாகல் பாலத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது

## செல்வம் எம்.பி



(கொழும்பு)

வரவு-செலவுத் திட்டத்தில் வட்டுவாகல் பாலத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையை தாம் வரவேற்பதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இனஅழிப்பு நடந்தேறிய, வரலாற்றுச் சிறப்பு மிக்க பாலத்தைப் புனரமைப்பது வரவேற்கத்தக்கது.

இந்த பாலத்தை நிர்மாணிக்க வேண்டும் என நாம் வலியுறுத்தியும் கடந்தகால அரசாங்கங்கள் இதனைக் கருத்தில் கொள்ளவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (நி-8)

# சஞ்சிகை வெளியீடும் கண்காட்சி நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வுகளின் ஒரு பகுதியாக கல்வியியல் துறை நடத்தும் "கலை ஞானம்" சஞ்சிகை வெளியீடும் பாடநூல் கண்காட்சி மற்றும் பாட நூலாக்க புலமைத்துவ கலந்துரையாடல் என்பன இடம்பெறவுள்ளன.

நாளை மறுதினம் சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இந் நிகழ்வுகள் கைலாசபதி கலையரங்கம் மற்றும் கல்வியியல் துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கல்வியியல் துறைத் தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (நி-6-8)

# சட்டம், ஒழுங்கை பேண அரசாங்கத்திற்கு உதவ தயார்

## சஜித் தெரிவிப்பு



(கொழும்பு)


புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகம் குறித்து எதிர்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதால் குழப்பநிலையேற்பட்டது.

இது பாரதூரமான நிலைமை நீதிமன்றத்திற்குள்ளேயே தனிநபரின் உயிருக்கு ஆபத்து என எதிர்கட்சி தலைவர் சஜித்பிரேமதாச தெரிவித்தார். நாளாந்தம் கொலைகள் இடம்பெறுகின்றன என தெரிவித்துள்ள எதிர்கட்சித்தலைவர் இதற்கு தீர்வை காண்பதற்கு உடனடி தீர்வு அவசியம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் சட்டமொழுங்கை பேணுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அவர் இந்த விடயத்தில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கு எதிர் கட்சி தயாராகவுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.(நி-8)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1939 - 03 - 28 | 2025 - 02 - 18 |



## கார்த்திகேசு சபாரத்தினம்

மண்டைதிவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு(சூரி) சபாரத்தினம் 18.02.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - கண்ணகி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரவணமுத்து - முத்துபிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் பாசமிகு கணவரும் அமுதா, ஆனந்தஜோதி, ஒளிவண்ணன், அனிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகராசா, மகேஸ்வரி, தேவசீலன்(ராஜன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.02.2025 இன்று வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10 மணியளவில் மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(சி-2295)

தகவல்
குடும்பத்தினர்.

# இராசிபலன்

20.02.2025
மாசி 08, வியாழக்கிழமை
சப்தமி காலை 7.53 மணிவரை.

விசாகம் முற்பகல் 11.35 மணிவரை
சுபநேரம் 8.02-9.32 மணிவரை
இராகுகாலம் -2.02- 3.32 மணிவரை

சந்திராஷ்டமம்.
அச்சுவினி, பரணி

வளவன்


மேஷம்

ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கொடுக்கல் வாங்கல்களில் நிதானம் தேவை, மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு.


கடகம்

அடிப்படை வசிதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும், எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு.


துலாம்

வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பதவிகளும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


மகரம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.


ரிஷபம்

நண்பர்களால் வளர்ச்சி கூடும், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


சிம்மம்

தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வாகன சுகத்தால் வளம் காணும் நாள், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.


விருச்சிகம்

குடும்பத்தினர் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பிய படியே நடைபெறலாம், பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள்.


கும்பம்

எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நல்லவர்களின் அறிவுரைகள் கிடைக்கும்.


மிதுனம்

கூட்டு முயற்சியில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள்.


கன்னி

எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரிய்ங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், சுபகாரியச் செலவுகளில் கவனம் காட்டுவீர்கள்.


மீனம்

அன்பால் சாதித்துக் காட்டும் நாள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணையலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

பொறுமையுள்ளவன் எதை விரும்பினாலும் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வு; மக்கள் எதிர்ப்பு

## மன்னாரில் பதற்றம்

(மன்னார்)

**மன்னாரில் கனிய மணல் அகழ்வுக்கான சுற்றுச் சூழல் ஆய்வு அறிக்கையை வழங்க கள விஜயத்தை மேற்கொண்ட திணைக்கள அதிகாரிகள் மக்கள் எதிர்ப்புத் தெரிவித்ததையடுத்து திரும்பிச் சென்றுள்ளனர்.**

கடந்த திங்கட்கிழமை மணல் அகழ்வுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக மன்னார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் நேற்றுக் காலை சுமார் 9.30 மணியளவில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு கட்டம் கட்டமாக வருகை தந்தனர்.



இதன் போது மாவட்டச் செயலகப் பகுதியில் மக்களால் போராட்டம் முன்னெடுக்கப் படலாம் என்ற அச்சத்தில் பொலிஸார் அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப் பட்டனர்.

இந்த நிலையில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைமையில் சுமார் 23 திணைக்களங்கள் தோட்ட வெளி கொன்னையன் குடியிருப்பு பகுதிக்கு கள விஜயத்தை அதிகாரிகள் மேற்கொண்ட போது அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டனர்.

இதன் போது அப் பகுதியில் நூற்றுக் கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இந் நிலையில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் மற்றும் நேற்று பாராளுமன்றத்தில் குறித்த கனிய மணல் பரிசோதனை மற்றும் அகழ்வு நடவடிக்கைக்கு எதிராக பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்திய நிலையில்,குறித்த விடயம் தொடர்பாக உயர் மட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் உடனடியாக முன்னெடுக்கப்பட இருந்த கனிய மணல் அகழ்வுக்கான பரிசோதனைகள விஜயம் நிறுத்தப்பட்டு, வருகை தந்த அதிகாரிகள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இதன் போது பொது அமைப்புகளின் தலைவர் வி.எஸ்.சிவகரன்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், உள்ளடங்கலாக கிராம மக்கள்,சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள்,மீன்பிடி அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

மன்னார் தீவு பகுதியில் கனிய மணல் அகழ்வு முன்னெடுப்பதற்கான ஆய்வுப் பணி நடவடிக்கைகள் கடந்த இரு தடவைகள் முன்னெடுக்கப்பட்ட போதும், மக்களின் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் வருகை தந்த குழுவினர் திருப்பி அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் திறனாய்வுப் போட்டி-2025 இன்று வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் து. திலீப்குமார் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் வட மாகாணக் கட்டடங்கள் திணைக்கள பிரதம பொறியியலாளர் எந்திரி.க.கணேசமூர்த்தி (பழைய மாணவர்) கலந்து கொள்ளவுள்ளார்.(6-8)

## நிர்வாகசபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப் புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இவ் நிர்வாகசபைக் கூட்டத்தில் 2025 ஆம் ஆண்டுக்கான சைவப் புலவர் இளஞ்சைவப்புலவர் பரீட்சைச் செயற்பாடுகள், சிவதீட்சை வழங்கல் தொடர்பான விடயம், பரீட்சைக்கான நேரடி வகுப்புக்களை நடத்துதல், கணக்கறிக்கை சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப் படவுள்ளது.

எனவே அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப் புலவர் சங்க செயலாளர் சைவப் புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார். (6-8)

## யாழில் 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச் செய்கை

(யாழ்ப்பாணம்)

வயல் நிலங்களில் சிறுதானிய உற்பத்திக்கு விதைகளுக்கு மாத்திரம் 27 மில்லியன் ரூபாய் இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளமையால் வடக்கு மாகாணத்தில் 1800 ஏக்கரில் தானியங்களை பயிரிட முடியும் என வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. சு. செந்தில்குமரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள சிறுதானியப் பயிர்ச்செய்கை தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது.இதன்போதே இவ்வாறு தெரிவித்தார்.

பெரும்போக நெல் அறுவடைக்குப் பின்னர் சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவுள்ளோம்.

அந்த வகையில் ஆளுநர் பிரதம செயலாளரின் வழிகாட்டுதலின் கீழ் அதற்கான நிதி ஒதுக்கீட்டை பெற்றுக் கொண்டுள்ளோம்

உழுந்து, பயறு, கௌப்பி, நிலக்கடலை போன்ற விதைகள் மற்றும் உற்பத்திக்கான இயந்திரங்களையும் மானிய அடிப்படையில் வழங்குவதாகவும் கால்நடைகளைக் கட்டுப்படுத்த முட்கம்பி வேலிகளும் வரகு,சாமை,குரக்கன்,கம்பு ஆகியவற்றின் பயன்பாடு குறைந்து வருவதால் அவற்றின் உற்பத்தியையும் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

யாழ்.தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சிறுதானியப் பயிர்ச் செய்கையை ஓரளவுக்கு மேற்கொண்டோம். அதில் 9.6 மில்லியன் ஒதுக்கப்பட்டு கடந்த வருடம் கிளிநொச்சியில் சிறுதானியப் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தோம்.

இம்முறை எமது வேண்டுகோளுக்கமைய பிரதம செயலாளர் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அனுமதியைத் தந்துள்ளார்.

ஆகவே யாழ்.மாவட்டத்தில் ஏறக்குறைய 500 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய பயிர்ச் செய்கையை முன்னெடுக்கவுள்ளோம்.

அந்தவகையில் மாவட்டச் செயலாளரின் நிதி ஒதுக்கீட்டில் மேலும் 400 ஏக்கர் நிலப்பரப்புக்கான விதைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் இம்முறை யாழ்.மாவட்டத்தில் 1000 ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்ச்செய்கை வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும் என தெரிவித்தார். (6-8-33)

## தேய்பிறை அட்டமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தலையாழி சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று வியாழக்கிழமை அலங்காரத் திருவிழாவுடன் இணைந்து இடம்பெறவுள்ளது.

இதன்போது அபிஷேகம், வசந்த மண்டப பூசையுடன் நெய் விளக்கேற்றலும், சகஸ்ர நாம அர்ச்சனையும் இடம் பெற்று சுவாமி அம்பாள் சமேதராக செந்தாமரை வாகனத்தில் வீதி வலம் காட்சியும் இடம் பெறும்.

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் தினமொரு அர்ச்சனையும் மருத்துவர் சி.ஜமுனானந்தாவின் கந்த புராணபடன அருளுரையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

## யாழில் 20 கிலோ ஆமை இறைச்சியுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் 20 கிலோ நிறையுடைய ஆமை இறைச்சியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் உயிருடன் ஆமை ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியில் கடலில் இருந்து பிடித்து வரும் ஆமைகளைப் பாதுகாத்து அவற்றை இறைச்சியாக்கி விற்கப்படுவதாக யாழ்.பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் உயிருடன் ஆமை ஒன்றினை மீட்டுள்ளனர். அத்துடன் 20 கிலோ நிறையுடைய ஆமை இறைச்சியையும் மீட்டுள்ளனர்.

அதனை அடுத்து அங்கிருந்த 57 வயதுடைய நபரை கைது செய்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-8-33)



யா/காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் பா.பாலகுமார் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது வெற்றி பெற்ற இல்லங்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருவகால சீட்டு வைத்திருப்போரை ஏற்ற மறுத்தால் சட்ட நடவடிக்கை

## இ.போ.சபை எச்சரிக்கை

(கொழும்பு)

**மாதாந்த பருவகால சீட்டை வைத்திருக்கின்ற பாடசாலை மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் முதியவர்கள் ஆகியோரை இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் ஏற்றிச் செல்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.**

பேருந்தில் கடமையாற்றும் யாரேனும் ஊழியர் ஒருவர் இந்தப் பருவகால சீட்டை வைத்திருப்பவர்களை ஏற்றிச் செல்ல மறுத்தால், அது இலங்கைப் போக்குவரத்துச் சபை கொள்கையின்படி கடுமையான குற்றமாகும் என இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

பருவகால சீட்டு வைத்திருப்பவர்கள் அனைவரையும் இலங்கைப் போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகளில் ஏற்றிச் செல்லப்பட வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அவர்களை ஏற்றிச் செல்ல மறுக்கும் பேருந்து ஊழியர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க தீர்மானித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏதேனும் அசௌகரியங்களை எதிர்கொள்ளும் பருவகால சீட்டை வைத்திருப்பவர்கள், 1958 என்ற எண்ணுக்கு அழைத்து தெரிவிக்குமாறு இலங்கை போக்குவரத்துச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

# இஸ்ரேலுக்கு பயணமாகும் 2000 தாதியர்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் நாட்டிலிருந்து இஸ்ரேலுக்கு 2,000 தாதியர்களை அனுப்புவதற்கு எதிர்பார்த்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதுவரையில் 148 தாதியர்கள் இஸ்ரேலுக்கு பணிக்காகச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 24 ஆம் திகதி தாதியர் பணிக்காகச் செல்லவுள்ள 17 தாதியர்களுக்கான விமான பயணச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (நி-8)

# ஆனந்த விஜேபால-சந்தோஷ் ஜா சந்திப்பு



(கொழும்பு)

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கு இடையிலான சந்திப்பு நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இலங்கை மற்றும் இந்திய சட்ட அமுலாக்க நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்புக்களை மேம்படுத்துவது குறித்து இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
உயரம்: 5' 5"
தகைமை/தொழில்: Dip. In Software
எதிர்பார்ப்பு: Diploma Degree
தொ.இ: B/15143

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்:உத்திராடம்
உயரம்:5' 6"
தகைமை/தொழில்: A/L Computer 3D Wood Designer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15144

பிறப்பு:1981 இந்து
நட்சத்திரம்:சதயம்
கி.பா:15 1/4
உயரம்:5' 6"
தகைமை/தொழில்:B.Sc Engineering, Teacher.
எதிர்பார்ப்பு:Gov. Job
தொ.இ: B/15147

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1994 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா:38
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: B.Engineering Software Engineer
எதிர்பார்ப்பு: தகுதியான வரன்
தொ.இ: G/15148

பிறப்பு:1997 இந்து
நட்சத்திரம்: உத்திராட்டாதி
கிபா :30
உயரம்: 5'
தகைமை/தொழில்: MLS Research Assistant Lecturer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, MLS Degree.
தொ.இ: G/15149

பிறப்பு-1994 இந்து
நட்சத்திரம்: பரணி
கிபா: 29
உயரம்:5' 2"
தகைமை/தொழில்:A/L Computer Typist. எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/15150

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24, 5 ஆம் குறுக்குத் தெரு, 10 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எலிசம் இராஜசிங்கம் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் இல-23/2, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதியும் இவ்வாதனம் முப்பத்தைந்து (35) வருடங்களாக தமது ஆட்சிக்குட்பட்டது என்றும் அதற்கத்தாட்சியாக சமாதான நீதவான் திரு.பா.அமிர்தநாயகம் முன்பாக 26.09.1987இல் விரிவான சத்தியக்கூற்றுப் பத்திரம் நிறைவேற்றியதாக கூறி 19.11.1997 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 9244 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் அதேயிடத்தைச் சேர்ந்த தமது மகளான செல்வி.அனுஷியா இரத்தினத்திற்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனம் இல-23/2, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த, இரத்தினம் மகள் அனுஷியா 03.11.2004 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயச்சித்ரா சிறிதரன் முகதாவில் 62 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம், தனது.பெற்றோரான செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதிக்கும் வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-23/2, 5 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லப்பா இரத்தினமும் பெண் காந்திமதியும் 04.11.2004 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்ரா சிறிதரன் முகதாவில் 63 ஆம் இலக்க சீதன உறுதி மூலம் தமது மகளான சாமித்தம்பி ஞானசெல்வம் பெண் அனுஷியாவுக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், சுண்டிக்குளி கோவிற்பற்று, கறையூர் இறை, யாழ்ப்பாணம் மாநகர சபை, 4 ஆம் வட்டாரத்தில் வரிமதிப்பு எண் 10 கொண்டதும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சி.இரத்தினசிங்கம் அவர்களினால் 28.11.1985 ஆம் திகதியில் அளந்து வரைந்த 260 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் படி குளி ஆறு தசம் இரண்டு(குளி 6.2) விஸ்தீரணம் கொண்டதுமான காணியும் கல்வீடும் பயிர்வகைகளும் இதற்கு எல்லைகள்:-
கிழக்கு - எலிசம் இராஜசிங்கத்தின் உரிமைக்காரரின் ஆதனம்.
வடக்கு - செல்லப்பா இராஜதுரையும் பெண் சொர்னம்மாவினதும் குத்தகைக் காணி.
மேற்கு - றோட்டு
தெற்கு - அருளப்பு பிலிப்பையாவும் பெண் சற்குணத்தினதும் குத்தகைக் காணி இதடங்களும்

தற்போது ஞானசெல்வம் பெண் அனுஷியா இவ்வாதனத்தைத் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது ஞானசெல்வம் பெண் அனுஷியா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**யாழ்.மாநகர சபை.**

(C-2294)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

## அமெரிக்கா-ரஷ்யா முடிவை உக்ரைன் ஏற்றுக் கொள்ளாது!

### ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவிப்பு



(கீவ்)

சவுதி அரேபியாவில் உக்ரைன்-ரஷ்யா போரை நிறுத்துவதற்காக நடந்த பேச்சுவார்த்தையில் உக்ரைன் பங்கேற்காததால் அதில் எடுக்கப்படும் எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

போரை முடிவுக்குக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு பேச்சு வார்த்தையும் நியாயமானதாக இருக்க வேண்டும் என உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்தார்.

உக்ரைனில் போரை எப்படி முடிவுக்குக் கொண்டு வருவது என்பது குறித்து உக்ரைன் இல்லாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது. சவுதி அரேபியாவுக்கு செல்ல முடிவு செய்திருந்தேன். ஆனால் அந்த பயணத்தை மார்ச் 10 ஆம் திகதி வரை ஒத்திவைத்துள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-8)

## ரஷ்ய-உக்ரைன் போருக்கு உக்ரைன் ஜனாதிபதியே காரணம்

### ட்ரம்ப் சாடல்

(றியாத்)

ரஷ்ய உக்ரைன் யுத்தத்திற்கு உக்ரைனே காரணம் என தெரிவித்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் யுத்தத்தை ஆரம்பித்திருக்கக் கூடாது என தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதியை தான் சந்திக்கக்கூடும் என தெரிவித்துள்ள டொனால்ட் ட்ரம்ப் மொஸ்கோவின் படையெடுப்பிற்கு உக்ரைன் ஜனாதிபதியே காரணம் என குற்றம்சாட்டியுள்ளார்.

சவுதிஅரேபியாவில் அமெரிக்க ரஷ்ய அதிகாரிகளின் சந்திப்பு இடம்பெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில் இதனை தெரிவித்துள்ள ட்ரம்ப் ரஷ்யாவுடனான யுத்த நிறுத்த பேச்சு வார்த்தையில் உக்ரைனிற்கு இடமளிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

இந்த யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவதற்கான திறமையும் அதிகாரமும் என்னிடம் இருப்பதாக நான் நினைக்கின்றேன் அது சரியான விதத்தில் இடம்பெறுகின்றது என தெரிவித்துள்ள ட்ரம்ப், தங்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்கவில்லை என உக்ரைன் தெரிவிக்கின்றது. நீங்கள் மூன்று வருடமாக இருக்கின்றீர்கள் நீங்கள் இதனை முடித்து வைத்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நீங்கள் ஒரு போதும் யுத்தத்தை ஆரம்பித்திருக்க கூடாது. நீங்கள் உடன்பாட்டிற்கு வந்திருக்க வேண்டும் அப்படி வந்திருந்தால் உக்ரைனிற்காக நான் உடன்பாட்டிற்கு வந்திருப்பேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (நி-8)

# நேட்டோவில் சேர்க்கக்

## மீண்டும் உறுதிபடத்

(றியாத்)

**நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதை அனுமதிக்க முடியாது என சவுதி அரேபியாவில் நடந்த பேச்சுவார்த்தையின் போது ரஷ்யா மீண்டும் உறுதியாக தெரிவித்துள்ளது.**

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே, 2014 இல் இருந்து மோதல் இருந்து வருகிறது. கடந்த 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து மூன்று ஆண்டுகளை எட்டியுள்ள நிலையில் போர் நீடித்து வருகிறது. இந்தப் போரைத் தொடர்ந்து ரஷ்யா மீது அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகள் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன. இதனால், அமெரிக்கா மற்றும் மேற்கத்தேய நாடுகளுடனான ரஷ்யாவின் உறவு பாதிக்கப்பட்டது.

இந்த சூழ்நிலையில் மேற்காசிய நாடான சவுதி அரேபியாவின் முயற்சியால் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே பேச்சுவார்த்தை ஏற்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் தொலைபேசியில் பேசினார். இதைத் தொடர்ந்து உக்ரைன் மீதான போரை நிறுத்துவது தொடர்பான விவாதம் தொடங்கியது.

இந்த சூழ்நிலையில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்க்கோ ரூபியோ, ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ், சவுதி அரேபியாவின் ரியாத்தில் சந்தித்து பேசினர். அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ், அமெரிக்கத் தூதர் ஸ்வீட் விட்கோவ் உள்ளிட்டோர் இந்த சந்திப்பில் இடம்பெற்றிருந்தனர். சவுதி அரேபியாவின் முயற்சியில் நடந்த இந்த பேச்சுவார்த்தை சுமார் 4 மணிநேரம் நீடித்தது.

அப்போது மூன்று முக்கிய விடயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டன. முதலில் இரு தரப்பு உறவுகளில் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக பேசப்பட்டது. அத்துடன் உக்ரைன் மீதான போரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடங்குவது அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையேயான பொருளாதார ஒத்துழைப்புகளை மீண்டும் புதுப்பிப்பது ஆகியவை தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டன.

இந்த சந்திப்பின் போது, நேட்டோ அமைப்பில் உக்ரைனை சேர்ப்பதை பொறுத்துக் கொள்ள முடியாது என்ற நிலையில் தாம் உறுதியாகவும் உள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் லாவ்ராவ் கூறியதாவது, நேட்டோ அமைப்



## ட்ரம்ப்-மஸ்க் கூட்டணிக்கு எதிராக அமெரிக்காவில் வெடித்தது போராட்டம்

(வோஷிங்டன்)


அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எலன் மஸ்குக்கு எதிராக பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ட்ரம்ப் மற்றும் மஸ்க் கூட்டிணைவால் உருவாக்கப்பட்ட திட்டங்களுக்கு எதிராக குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் பெப்ரவரி மூன்றாம் திங்கள் அமெரிக்காவில் "பிரசிடெண்ட்ஸ் டே" கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் குறித்த தினத்தில் நாடு முழுவதும் விடுமுறை என்பதால் அமெரிக்க ஜனாதிபதிகளாக இருந்தவர்களை நினைவு கூர்ந்து மக்கள் நன்றி செலுத்துவர்.

எனினும் இந்த ஆண்டு பிரசிடெண்ட்ஸ் டே நிகழ்வில் ட்ரம்பிற்கு எதிராக ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டம் நடத்தியுள்ளனர்.

கடும் பனிப்பொழிவுக்கு மத்தியில் வோஷிங்டனில் உள்ள பாராளுமன்றக் கட்டடத்துக்கு வெளியே நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் ட்ரம்பிற்கு எதிராக



முழக்கங்கள... மேலும் ... கலிஃபோர்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## வெளிநாடு

# ல் உக்ரைனை
# க் கூடாது!
## த் தெரிவித்தது ரஷ்யா

த
ில்
ும்

ஆலோ
ந தரப்பு
பிரச்சி
ண்பது
த்துடன்
பாரை
டிக்கை
மரிக்கா
பயான
புகளை
யவை
திக்கப்

போது,
உக்
றுத்துக்
என்ற
ாகவும்
ரிவித்
ரஷ்ய
வ்ராவ்
அமைப்



பில் உக்ரைனை சேர்ப்பது என்பது உக்ரைனின் கூட்டாட்சிக்கும் இறையாண்மைக்கும் விடுக்கப்பட்ட நேரடி அச்சுறுத்தல் என்பதை ஜனாதிபதி புடின் ஏன் தொடர்ந்து கூறி வருகிறார் என்பதை விளக்கினோம். இந்த பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக இருந்தது. அர்த்தமுள்ளதாகவும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு விதிகளை வகுக்கவும் ஒப்புக் கொண்டோம் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

ரஷ்யா - உக்ரைன் இடையிலான போர் முடிவுக்கு வந்தால், பொதுவான நலன் சார்ந்த பிரச்சினைகளில் புவிசார் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் உலகிற்கு நல்லது. நமது உறவை நீண்ட காலத்திற்கு மேம்படுத்தும் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.இந்த போரை முடிவுக்கு கொண்டு வர மீண்டும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கும் அமெரிக்கா ஒப்புக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)



முழக்கங்களை எழுப்பியிருந்தனர்.

மேலும் ஃப்ளோரிடா மற்றும் கலிஃபோர்னியா மாகாணங்களிலும் பெரிய அளவிலான போராட்டம் நடைபெற்றதாக கூறப்படுகிறது. (நி-8)

## வாகனங்கள், மருந்துகள் மீது 25 சதவீத வரி விதிக்கும் ட்ரம்ப்



(வோஷிங்டன்)

இறக்குமதி செய்யப்பட்ட வாகனக் கட்டணங்கள், குறைக்கடத்திகள் மற்றும் மருந்துப் பொருட்கள் மீது சுமார் 25 சதவீத வரிகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் செவ்வாயன்று தெரிவித்தார்.சர்வதேச வர்த்தகத்தை உயர்த்த அச்சுறுத்தும் ட்ரம்பின் அண்மைய கட்டண எச்சரிக்கை இதுவாகும்.


புளோரிடாவில் உள்ள தனது மார்-ஏ-லாகோ தோட்டத்தில் செய்தியாளர் சந்திப்பின் போது ட்ரம்ப் இந்த விடயத்தைக் தெரிவித்தார்.இது குறித்த அறிவிப்பு எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வெளியாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய கடமைகள் செயற்படுத்தப்பட்டால் ஜனாதிபதியின் வர்த்தகப் போர் விரிவுபடுத்தும். ட்ரம்ப் முன்னர் மார்ச் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் எஃகு மற்றும் அலுமினியம் மீது 25% கட்டணங்களை அறிவித்தார்.

எனினும், இப் புதிய அறிவிப்பு ஏனைய பிற துறைகளையும் பாதிப்பதாக அமைந்துள்ளது.

உலகெங்கிலும் உள்ள அமெரிக்க வர்த்தக உறவுகளை மறுசீரமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக ட்ரம்ப் கட்டணங்களை உயர்த்தியுள்ளார். (நி-8)

## கரையொதுங்கும் திமிங்கலங்கள்




(கன்பெரா)

அவுஸ்திரேலிய மாநிலமான டாஸ்மேனியாவில் உள்ள ஒரு கடற்கரை பகுதியில் 150 இற்கும் மேற்பட்ட திமிங்கலங்கள் கரையொதுங்கிய நிலையில் சிக்கித் தவிக்கின்றன.

கடந்த 48 மணி நேரத்தில் நடந்த இந்த சம்பவத்தில் டசின் கணக்கான டொல்பின்கள் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம், நேற்று புதன்கிழமை காலை நிலவரப்படி சுமார் 90 டொல்பின்கள் மாத்திரமே தற்சமயம் உயிருடன் உள்ள நிலையில் அவற்றை காப்பாற்றும் பணிகளில் சுற்றுச்சூழல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

டாஸ்மேனியாவின் இந்தப் பகுதியில் 50 ஆண்டுகளில் இது போன்ற திமிங்கலங்கள் கரை ஒதுங்குவது இதுவே முதல் முறையாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-8)

## சுற்றுலாப் பயணிகளை ஏமாற்றிய சீன நிர்வாகம்

(பீஜிங்)

சீனாவில் உள்ள சுற்றுலாத்தளம் ஒன்று சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக பருத்தி மற்றும் சோப்பு நுரையை கொண்டு பனிப்பொழிவு இருப்பது போல் ஏமாற்றியுள்ளது.

சீனாவின் தென்மேற்கு சிச்சுவான் மாகாணத்தில் புதிதாக செங்டு பனி கிராமம் ஒன்று திறக்கப்பட்டது. இங்கு நிலவும் பனிப்பொழிவை பார்க்க ஏராளனமான சுற்றுலாப் பயணிகள் அங்கு வருகை தந்தனர்.

ஆனால், அந்த இடத்தில் பருத்தி மற்றும் சோப்பு நுரையைக் கொண்டு பனிப்பொழிவு இருப்பது போல் காட்டியுள்ளதை கண்டு ஏமாற்றமடைந்த சுற்றுலாப் பயணிகள் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு புகார் அளித்துள்ளனர்.




இதனையடுத்து அந்த சுற்றுலாத் தளம் தற்காலிகமாக மூடப்பட்டது. பின்பு தாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு பனிப்பொழிவு இல்லாததால் இவ்வாறு செய்ததாக நிர்வாகம் ஒப்புக்கொண்டு மன்னிப்பு கோரியுள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாதத்தின் பின்

## டிஜிற்றல் அடையாள அட்டை




(கொழும்பு)

டிஜிற்றல் அடையாள அட்டையை எதிர்வரும் ஏப்ரல் மாதத்தின் பின் வெளியிட நடவடிக்கை எடுக்கப் படுமென டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,


இதற்கான தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் முறைமைகளை தயாரிக்கும் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. பிரதேச செயலகங்களின் செயற்பாடுகள் ஊடாகத் தரவுகளை வழங்குவதற்காக பொதுமக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இதற்காக இணையம் மூலமான திட்டமொன்றும் தற்போது செயற் படுத்தப்பட்டுள்ளது.

முதலாம் கட்டத்தின் கீழ் டிஜிற்றல் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போரின் நிழற்படம் மற்றும் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் கண் விழிகளின் அடையாளத்தை உள்ளடக்குவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் புதிதாக அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்போருக்கு முதலாம் கட்டத்தின் கீழ் டிஜிற்றல் அடையாள அட்டையை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பழைய அடையாள அட்டைகளுக்கான டிஜிற்றல் அடையாள அட்டைகளையும் விநியோகிக்க திட்டமிடப் பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 350 | 500 | 500-600 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 175 | 200 |
| பச்சைமிளகாய் | 1500 | 1350 | 1200 | 1200-1300 | 1500 |
| தக்காளி | 200 | 150 | 150 | 80 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 280 | 250 | 300-350 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 250 | 400 |
| கரட் | 800 | 850 | 600 | 720 | 1000 |
| பூசணி | 120 | 140 | 120 | 80-100 | 200 |
| புடோல் | 200 | 250 | 200 | 200-250 | 300 |
| வாழைக்காய் | 200 | 140 | 150 | 80-120 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 200 | 195 | 240 |
| பாகற்காய் | 600 | 500 | 600 | 450-600 | 600 |
| வெண்டக்காய் | 400 | 350 | 300 | 300-350 | 500 |
| கருணைக் கிழங்கு | 200 | 250 | 180 | 150 | 300 |
| பயற்றங்காய் | 300 | 300 | 400 | 400-500 | 350 |
| லீக்ஸ் | 450 | 400 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 350 | 250 | 250 | 150 | 400 |
| கறிமிளகாய் | 1000 | 800 | 1000 | 700-800 | 1000 |
| முருங்கைக்காய் | 2000 | 2500 | 1000 | 2500 | 2000 |
| போஞ்சி | 350 | 300 | 300 | 350-400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 400 | 200 | 700 | 250 | 280 |
| கீரை - 1 பிடி | 130 | 120 | 150 | 50-70 | 200 |
| தேசிக்காய் | 200 | 250 | 150 | 150-250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 220 | 250 | 150-250 | 230-280 |
| இராசவள்ளி | 500 | 600 | 600 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 180 | 150 | 200 | 80-150 | 240 |
| முள்ளங்கி | 100 | 140 | 200 | 120-150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 80 | 80-100 | 150 |

# இன்று ஒரு தகவல் 326



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தர்மம்

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் ஒரு நாள் மாறுவேடம் போட்டு நகர்வலம் வந்தார். இரவு வேளை ஒரு குதிரை மேல் ஏறி தன்னுடைய நகரமெல்லாம் எப்படி இருக்கிறது என்று பார்த்து வந்தார்.

நகரத்துக்கு வெளிப்பக்கமாக ஒரு புளியமரத்தடியில் ஒரு ஆள் பரிதாபமாக உட்கார்ந்து இருந்தார். அந்தப் பக்கமாக வந்த ராஜா இதைப் பார்த்தார். ஏன் இந்த நேரத்தில் உட்கார்ந்து இருக்கிறீர்கள் என்று கேட்டார்.

ஐயா.. நான் ஊருக்குள்ளே போக வேண்டும். கொஞ்சம் உங்கள் குதிரையில் கொண்டு போய் விட்டால் உதவியாக இருக்கும் என்றார்.

சரி! ஏறுங்கள் என்றார் ராஜா. என்னால் ஏற முடியாது. நீங்கள் தான் என்னை தூக்கி உட்கார வைக்க வேண்டும். ஏனென்றால் நான் கை கால் விளங்காதவன். என்னுடைய கால் இரண்டும் உணர்ச்சியே இல்லாத மரக்கட்டை மாதிரி ஆகிவிட்டது. அதனால்தான் நடக்க முடியாமல் இங்கேயே இருக்கிறேன் என்றான். ஐயோ பாவம் என்று பரிதாபப்பட்டு ராஜா கீழே இறங்கினார். அவனைத் தூக்கிக் குதிரை மேல் உட்கார வைத்தார்.

அவ்வளவுதான் அந்த ஆள் குதிரையை அடித்து விரட்டிவிட்டு போய்விட்டான். ஆமாம்! அவன் நிஜமாகவே கை கால் விளங்காதவன் இல்லை! அவன் ஒரு திருடன்! குதிரையை கடத்திக்கொண்டு போவதற்குத் தான் இது மாதிரி வேடம் போட்டிருந்தான். ராஜா ஏமாந்துபோய் கீழேயே நின்றார். அவருக்கு மிகவும் அவமானமாக இருந்தது. இருந்தாலும் யாருக்கும் தெரியாமல் அரண்மனைக்குத் திரும்பி வந்துவிட்டார். இந்த விடயத்தை யாரிடமும் சொல்லவில்லை.

கொஞ்ச நாள் கழித்து ஒருநாள் அரண்மனையிலே வழக்குகள் விசாரணை நடந்து கொண்டிருந்தது. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்து தீர்ப்பு வழங்கிக்கொண்டிருந்தார். திடீரென ஒருவரைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். மன்னா! இவன் பல இடங்களிலே திருடியிருக்கிறான். கொள்ளையடித்திருக்கிறான். நேற்று இரவு இவன் ஒரு வீட்டிலே நுழையும் போது நம் காவலாளிகள் பார்த்து விட்டார்கள். அதுதான் பிடித்து இங்கே கொண்டு வந்தோம் என்றார் அமைச்சர்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அன்றைக்கு தன்னை ஏமாற்றிய அதே ஆள் தான் இவன் என்று புரிந்தது. ஆனால் அவனுக்கு இவரை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அன்று ராஜா மாறுவேடத்தில் இருந்தார். ராஜா பார்த்தார். தீர்ப்பு நாளைக்கு வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு சபையைக் கலைத்தார். அந்த ஆளைக் கொண்டுபோய் சிறையில் அடைத்தார்கள். அன்றைக்கு நடுராத்திரி எல்லோரும் தூங்கிய பின் ராஜா ரகசியமாக சிறைக்கூடத்திற்குச் சென்று அந்த ஆளைப் பார்த்து என்னை உனக்கு அடையாளம் தெரிகிறதா? நன்றாகப் பார் என்றார்.

என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் மகாராஜா இல்லையா என்றான். அது இல்லை. இதற்கு முன்பு என்று கேட்டார். இல்லையே என்றான். ராஜா தன்னுடைய அலங்காரத்தைக் கலைத்தார். உடனே அந்த ஆளுக்கு ஞாபகம் வந்துவிட்டது.

மன்னா! அன்றைக்கு குதிரையைக் கடத்திப் போனது உங்களிடம் இருந்தா? என்னை மன்னித்துவிடுங்கள் என்று காலில் விழுந்தான்.

இதோ பார் எழுந்திரு. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நாளைக்கு நான் தண்டனை கொடுக்கப் போவது நீ திருட முயன்ற வழக்கிற்காகத்தான். அன்று நீ என்னை ஏமாற்றியதற்கு நான் தண்டிக்கப் போவதில்லை. நான் உன்னிடம் ஏமாந்த விடயத்தை யாரிடமும் சொல்லிவிடாதே. அந்த ரகசியம் நம் இரண்டு பேருக்கும் மட்டும் தெரிந்ததாக இருக்கட்டும் என்றார்.

இந்தக் கதையை ஒரு நண்பர் என்னிடம் சொல்லிவிட்டு அந்த ராஜா ஏன் அப்படி அந்த ஆளிடம் சொன்னார்? என்று கேள்வி கேட்டார். நான் யோசித்து பார்த்து பதில் சொன்னேன். ராஜா திருடனிடம் ஏமாந்த விடயம் தெரிந்தால் அது கேவலம் இல்லையா? அதனால்தான் அப்படி சொல்லி இருப்பார் என்றான். நண்பன் சிரித்தான். எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள்.

ஆனால் அதுகாரணம் இல்லை என்றார். சரி நீங்களே சொல்லுங்கள் என்றான். அதாவது அந்த சம்பவம் வெளியே எல்லோருக்கும் தெரிந்தால் கஷ்டப்படுபவர்களுக்கு கை கொடுக்க எல்லோரும் தயங்க ஆரம்பிப்பார்கள்.

உண்மையாக கஷ்டப்படுபவர்களைப் பார்த்துக் கூட இவர் ஏமாற்றுவார் என்று சந்தேகப்பட ஆரம்பிப்பார்கள். நாட்டிலே தர்மம் கெட்டுவிடும். யாரும் உதவி செய்ய முன்வர மாட்டார்கள். அப்படி ஒரு நிலை நம் நாட்டுக்கு வந்துவிடக்கூடாது என்று தான் ராஜா அப்படி செய்தார். இதுதான் நண்பர் கொடுத்த விளக்கம். ராஜா என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும். இந்தக் கதையைக் கேட்டதும் இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்றார்.

ஒருவர் குதிரையிலே வந்துகொண்டிருந்தார். வழியிலே ஒருவர் எனக்கு கை கால் விளங்கவில்லை. எனக்கு லிப்ட் கொடுக்க முடியுமா என்று கேட்கிறார். வேண்டாம் நீ என்னை ஏமாற்றிவிட்டு இந்தக் குதிரையை கடத்திக் கொண்டு போய்விடுவாய் என்கிறார். அது எப்படி சரியாகச் சொல்கிறீர்கள் என்று கேட்கிறார் இவர். நான் ஏற்கனவே ஒருத்தனை ஏமாற்றி விட்டுத் தான் இந்தக் குதிரையை தள்ளிக்கொண்டு வருகிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேட்பாளர்கள் தொடர்பில் யாழில் தெளிவூட்டல் செயலமர்வு




(யாழ்ப்பாணம்)

தேர்தல் செலவினத்தை ஒழுங்குபடுத்துதல் சட்டம் சம்பந்தமாக உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை காலை 09.30 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிவுறுத்துவதற்காக பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பது தொடர்பான தெளிவூட்டல்களை தேர்தல்கள் உதவி ஆணையாளர் முன்வைத்தார்.

இந் நிகழ்வில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நீதி) சட்டத்தரணி சிந்தக குலரத்ன, மேலதிக தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எஸ்.அச்சுதன், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (6-8)

# மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள போட்டி வவுனியாவில்



(குருமன்காடு)

மாற்றுத் திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்டச் செயலகம் இணைந்து நடத்தும் வவுனியா மாவட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டியிலே மாவட்ட செயலாளர் பீ.ஏ.சரத் சந்திர, மேலதிக மாவட்ட செயலாளர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் உதவி பிரதேச செயலாளர் த.தர்மேந்திரா, உதவி மாவட்ட செயலாளர் சார்ஜா மற்றும் அரச உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மாற்றுத் திறனாளிகளின் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டது. (6-8-250)

# மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/உயரப்புலம் மெதடிஸ் மிஷன் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று வியாழக்கிழமை பி.ப 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் திருமதி. செந்தினி ஜெயக்குமார் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந.ஸ்ரீமுருகதாஸ்காந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (6-8)

# 14 இந்திய மீனவர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைதீவுக்கு அண்மித்த கடற்பகுதியில் இரண்டு படகுகளுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 இந்திய மீனவர்களுக்கும் தலா ஐம்பதாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் இதில் முற்குற்றமுள்ள ஒருவருக்கு 18 மாத கால கட்டாயச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி குறித்த கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்த 14 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதையடுத்து குறித்த 14 பேருக்கும் எதிராக வழக்குப் பதிவு செய்து அன்றைய தினம் இரவு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கிற்கான விசாரணை நேற்று இடம் பெற்றது. குறித்த குற்றவாளிகளுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது. (6-8-315)

# இறுவெட்டு வெளியீடு

(சாவகச்சேரி)

கோப்பாய் வடகோவை சித்திர வேலாயுத சுவாமி ஆலய திருப்பள்ளிஎழுச்சிப் பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி பாடலை கலாநிதி கார்த்திகேசு திருப்பதி எழுத, எம்.எஸ் பிரதீபன் பாடியுள்ளார்.

இசை அமைப்பினை அருணா கேதீஸ் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# முத்துஐயன்கட்டுக்குளத்தின் கீழ் 4564.5 ஏக்கரில் சிறுபோகம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத் தின் பாரிய நீர்ப்பாசன குளமான முத்துஐயன் கட்டுக் குளத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோகக் கூட்டம் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

முத்துஐயன்கட்டு குளத்தின் கீழ் 4564.5 ஏக்கரில் சிறுபோக செய்கைக்காக தீர்மானிக்கப்பட்ட நிலையில் 3686.5 ஏக்கரில் நெற்செய்கையும் 878 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சிறுபோக செய்கைக்கான வாய்க்கால் துப்பரவு, நீர் வழங்கல் மற்றும் கால்நடை கட்டுப்பாடு, நன்னீர் மீன்பிடி உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் முல்லைத்தீவு மாவட்டத்தின் நீர்ப்பாசன பொறியியலாளர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலைவர்கள் கிராம அலுவலர்கள் கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8)

# கிளி. மாவட்ட விவசாயக்கூட்டம் பலதரப்பட்ட விடயங்கள் ஆராய்வு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான மாவட்ட விவசாய குழுக் கூட்டம் நேற்றுக் காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் இக் கூட்டத்தில் முன்கொண்டுவரப்பட்டு விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக நீர்ப்பாசன குளங்களின் தற்போதைய நிலைமைகள், பயிரழிவு மதிப்பீடு தொடர்பான பிரச்சினைகள், பூச்சித் தாக்கங்கள், துறை சார்ந்து தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், துறை சார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாயப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (6-8-315)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 707





பயம் கோபமாகவும் ஆத்திரமாகவும் மாறி வந்ததென்பதற்கு அறிகுறிகள் தென்பட்டன.

ஆனால் முதல் மந்திரியோ சிறிதும் பதட்டமில்லாமல், "இளவரசே! குற்றம் சாட்டுகிறேன் என்று ஏன் சொல்லுகிறீர்கள்? தாங்கள் இந்தச் சோழ சாம்ராஜ்யத்தை ஆள விரும்பினால், அது எப்படிக் குற்றமாகும்? வீராதி வீரரான விஜயாலய சோழரின் குலத்தில் உதித்தவர் தாங்கள். மகானாகிய சிவஞான கண்டராதித்தரின் திருப்புதல்வர். இந்தச் சோழ சிம்மாசனம் ஏறுவதற்குத் தங்களுக்குப் பூரண உரிமை உண்டு. அதைத் தாங்கள் விரும்புவது குற்றம் எப்படி ஆகும்? அது குற்றம் என்றும் ஆகையால் அதற்காக இரகசியமான சதி முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்றும் யாராவது தங்களுக்கு யோசனை சொன்னால் அதைத் தாங்கள் நம்ப வேண்டாம்.

இளவரசே! இந்தக் கிழவனுடைய வார்த்தையைக் கொஞ்சம் செவி சாய்த்துக் கேளுங்கள். தங்களுடைய பெற்றோர்களின் விருப்பம் ஒரு விதமாயிருந்தது. தாங்களும் அதற்கு இணங்கிச் சிவ பக்தியில் ஈடுபட்டிருந்தீர்கள். இப்போது தங்கள் மனம் மாறியிருக்கிறது. அதைப் பற்றிக் குற்றம் கூற யாருக்கும் பாத்தியதை இல்லை. தங்களுடைய உரிமையைத் தாங்கள் பகிரங்கமாகக் கோரலாம். சக்கரவர்த்தியிடமே தங்கள் விருப்பத்தைத் தெரியப்படுத்தலாம். அதை விடுத்துக் கேவலம் காலாமுகக் கூட்டத்தாரின் ஆதரவைக் கோருவதற்காக அமாவாசை இருட்டில் தன்னந்தனியாகக் கொள்ளிடக் கரைக்குப் போக வேண்டிய அவசியமில்லை. அல்லது சம்புவரையர் மாளிகையில் அர்த்த ராத்திரியில் திருடர் கூட்டத்தைப் போல் கூட்டம் போட்டுச் சதிப் பேச்சுப் பேச வேண்டிய அவசியமும் இல்லை. இந்த மாதிரியெல்லாம் தங்களுக்கு யோசனை கூறுகிறவர்கள் தங்களுடைய பரம விரோதிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள்!"

மதுராந்தகன் பெருங் குழப்பத்துக்கு உள்ளானான். முதன் மந்திரிக்கு இவ்வளவு விடயங்களும் தெரிந்திருக்கின்றன என்று எண்ணியபோது அவனுக்கு உண்டான வியப்புக்கு அளவில்லை. அதே சமயத்தில் பீதி ஒரு பக்கமும், பீதி காரணமாக ஆத்திரம் ஒரு பக்கமும் பெருகிக் கொண்டிருந்தன.

"ஐயா தங்களுக்கு இவையெல்லாம் எப்படித் தெரிந்தது? எந்தத் துரோகி என்னுடன் சிநேகமாயிருப்பது போல் நடித்துக் கொண்டு தங்களிடமும் வந்து சொல்லிக் கொண்டிருக்கிறான்?" என்று கேட்டான்.

"தாங்கள் அதை அறிய முயல்வதில் பயனில்லை. இந்தப் பரந்த இராஜ்யமெங்கும் எனக்குக் கண்கள் இருக்கின்றன! காதுகளுமிருக்கின்றன! நான் அறியாமல் எதுவும் இந்த நாட்டில் நடைபெற முடியாது."

"அப்படியானால், சக்கரவர்த்திக்கும் இவையெல்லாம் தெரியுமா?" என்று மதுராந்தகன் கேட்டான்.

"இல்லை அவருக்குத் தெரியாது, என் கண்களும், காதுகளும் தெரிவிக்கும் எத்தனையோ இரகசியங்கள் என் நெஞ்சகத்தில் பதிந்து கிடக்கின்றன. அவசியமும் அவசரமும் நேர்ந்தால் ஒழிய அவை வெளியில் வரவே வரா."

"ஆம், ஆம் தங்களுடைய நெஞ்சகத்தில் எவ்வளவோ பயங்கரமான இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றன.

அவை மட்டும் வெளியில் வந்தால், இந்தச் சோழ சாம்ராஜ்யமே நடு நடுங்கிப் போகாதா?" என்றான் மதுராந்தகன். அவனுடைய குரலில் இப்போது இதற்கு முன் இல்லாத கபடமும், வஞ்சகமும் தொனித்தன.

முதன் மந்திரி அதைக் கவனித்தும் கவனியாதவர் போல் கூறினார் "சக்கரவர்த்தி என்னுடைய ஆப்த நண்பர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஏமாற்றுபவன் ஏமாறுவான்



(நேற்றைய தொடர்ச்சி...)

மாடுகளை ஓட்டிக்கொண்டு சென்ற வேலைக்காரன் சிறிது நேரத்திற்குள் வீட்டிற்கு வந்தான். உடனே செல்வர் அவனிடம், "நான் சொன்ன வேலைகளை முடித்து விட்டாயா?" என்று கேட்டான்.

உடனே வேலைக்காரன் செல்வரை பார்த்து, "ஐயா, எந்த வேலையும் என்னால் செய்ய முடியவில்லை.

ஒரு மாட்டைக் கட்டினால் மற்றொரு மாடு அறுத்துக் கொண்டு ஓடுகிறது.இதில் நான் எப்படி தோட்டத்தை உழுவது என்றான்.

உடனே கோபப் பட்ட அந்த செல்வர், "வேலையை செய்யச் சொன்னால் விளையாட்டு காட்டுகிறாயா" என்று கூறி அவன் முதுகில் ஓங்கி அறைந்தார்.

அவ்வளவுதான் அவன் செல்வரை பார்த்து, "ஐயா, இது நாள் வரை யாருமே என்னை அடித்ததில்லை. நீங்கள் என்னை அடித்து விட்டீர்கள் இனி நான் உயிர் வாழ்ந்து எந்தப் பயனும் இல்லை.

அந்தச் சுண்ணாம்பை குடித்து என் உயிரை விட்டுவிடுகிறேன்" எனக் கூறி விட்டு சமையல் அறைக்குள் ஓடினான்.

"டேய்.. குடிக்காதே என்று அந்த செல்வர் அவன் பின்னாலே கத்திக் கொண்டு வந்தார். அதற்குள் அந்த டம்ளரில் இருந்த கட்டித் தயிர் முழுவதையும் அந்த வேலைக்காரன் குடித்து விட்டான்.

வேலைக்காரனை ஏமாற்ற நினைத்து தானே முடிவில் ஏமாந்து விட்டேனே" என்று செல்வர் மனதில் கூறிக்கொண்டு அங்கிருந்து நகர்ந்தார்.

நீதி: பிறரை ஏமாற்ற நினைப்பவன் முடிவில் தானே ஏமாந்து போவான். எனவே யாரையும் ஏமாற்ற கூடாது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது காரியத்தின் மீது அன்பும், பிறரது விசேஷ பாகத்தின் மீது நம்பிக்கையும் இருந்தால் ஒத்துழைப்பு தானாக வரும். ~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டதாம்

தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் ஒருவர் கூறியுள்ளார்.

அவர் கூறிய கருத்துக்கான நியமங்கள் என்ன என்பது தெரியவில்லை.

ஆனால் தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய காலம் வந்துவிட்டதென்பது மிகத் தவறான கணிப்பு.

இந்தக் கணிப்பானது கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வியில் இருந்து உரைப்பட்டதேயன்றி, தமிழ் மக்களின் நிலைமை தொடர்பில் ஆராய்ந்து கூறப்பட்டதல்ல என்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

அதாவது இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றபோதெல்லாம் தமிழ்க் கட்சிகளை ஒன்றுபடுத்த வேண்டும் என்ற எண்ணமோ அன்றி தமிழ்க் கட்சிகள் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற நினைப்போ இலங்கைத் தமிழரசுக் கட்சியிடம் இருக்கவில்லை.

தேர்தல் என்றதும் தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பர் என்ற நிலைமை இருந்தபோது, ஏனைய தமிழ்க் கட்சிகளைப் புறந்தள்ள வேண்டுமென்ற நிலைப்பாடே தமிழரசுக் கட்சியிடம் இருந்தது.

ஆனால் இப்போது தென்பகுதி உட்பட வடக்குக் கிழக்கு ஈறாக மக்கள் அரசியல் மாற்றம் பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டபோது, நிலைமை தலைகீழாக மாறியது.

ஆம், யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களைப் பெற்றபோது தமிழரசுக் கட்சி திகைத்துப் போனது.

இதை மறுதலையாகக் கூறுவதாயின், கடந்த பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்டும் தோல்வியைச் சந்தித்தபோதுதான், அந்தக் கட்சியின் அடித்தளம் ஆடத் தொடங்கியது.

கூடவே உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் படுதோல்வி காண்பது தவிர்க்க முடியாதது என்ற நிலைமையை அந்தக் கட்சியினர் புரிந்து கொண்டனர்.

இந்த நிலையிலேயே தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டது என்ற ஆசாட வார்த்தை வெளிப்பட்டுள்ளது.

உண்மையில் வன்னிப் போர் முடிந்த கையோடு (2009) தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டிருக்க வேண்டும்.

அல்லது ஏலவே விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அதைச் செய்யாமல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சின்னாபின்னப்படுத்திவிட்டு, இப்போது தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டிய நேரம் வந்துவிட்டதெனக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற தந்திரமேயன்றி வேறில்லை.

உண்மையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் என்ற நினைப்பு தமிழரசுக் கட்சியிடம் மனதார இருந்திருக்குமாயின், தமிழ் மக்கள் பேரவை உருவாகியபோது அதற்குப் பூரண ஆதரவை அவர்கள் வழங்கியிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் பேரவை புஸ்வாணமாகிவிடும். தோற்றவர்களின் கூடாரம் என்றெல்லாம் கூவினர்.

ஆனால் இப்போது அவர்கள் தோற்றுப் போனதனால் ஒற்றுமை பற்றிக் கதைக்கின்றனர் எனில் இதைவிட ஈனத்தனம் வேறு என்னவாக இருக்க முடியும்.

# தலதாமாளிகை மீதான தாக்குதலுக்கு ஜே.வி.பி மன்னிப்புக் கோர வேண்டும்

## சபையில் கபீர்ஹாசிம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். நூலகம் தீக்கிரையாக்கப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரியதைப் போன்று தலதாமாளிகை மீது குண்டுத் தாக்குதலை மேற்கொண்டமைக்காக மக்கள் விடுதலை முன்னணி மன்னிப்புக் கோர வேண்டும். 75 ஆண்டுகால சாபத்துக்கு மக்கள் விடுதலை முன்னணிப் பொறுப்புக் கூற வேண்டும்.

75 ஆண்டு கால அரசாங்கத்தை சாபம் என்று இனியும் குறிப்பிட்டு மக்கள் மத்தியில் வெறுப்பை ஏற்படுத்தாதீர்கள். சாயம் வெளுத்து விட்டது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியினர் கடந்த காலங்களில் 75 ஆண்டுகால அரசியலை சாபம் என்று விமர்சித்தார்கள். ஆனால் 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அன்று சாபம் என்று குறிப்பிட்டதை தவறென்று தற்போது ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கடந்த காலங்களில் ஜே.வி.பியினர் ஏலம் விட்ட பல கொள்கைகள் வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவு செலவுத் திட்டத்தின் மீதான உரையில் யாழ்.நூலகம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். யாழ். பொது நூலகத்துக்குச் செல்லும் போது தமிழர்கள் காலணிகளை கழற்றி வைத்து விட்டுச் செல்வார்கள்.

யாழ்.நூலகம் அரசியல் கட்சியின் ஒத்துழைப் புடன் தீ வைக்கப்பட்டது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். யாழ்.நூலகம் தீ வைக்கப்பட்ட சம்பவத்தில் எமது தாய்க் கட்சியின் பெயர் குறிப்பிடப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பின்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. இதனையிட்டு நாங்கள் இன்றும் கவலையடைகிறோம்.

யாழ்.நூலகம் தீ வைக்கப்பட்ட சம்பவத்துக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

யாழ்.நூலகம் பற்றிப் பேசிய ஜனாதிபதிக்கு மக்கள் விடுதலை முன்னணி அன்று தலதாமாளிகைக்குக் குண்டுத்தாக்குதல் நடத்தியது நினைவுக்கு வரவில்லையா?, மன்னிப்பு கேட்க தோன்றவில்லையா?, யாழ்.நூலகம் தீக்கிரையானது தவறு.

அதேபோன்று தலதாமாளிகை மீது குண்டுத்தாக்குதல் மேற்கொண்டமைக்கும் மன்னிப்புக் கோருங்கள். ஆகவே பிறருக்குப் போதனையளிக்க மக்கள் விடுதலை முன்னணிக்கு உரிமையில்லை என்றார். (ம-7)

## பாதுகாப்புத் தரப்பின் அதிகாரிகள் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு

### ஆளும் தரப்பின் பிரதம கொறடா நளிந்த ஜயதிஸ்ஸ

பாதுகாப்புத் தரப்பின் ஒரு சில அதிகாரிகள் பாதாளக் குழுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு எதிராகக் க்டுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை நடைபெற்ற அமர்வின் போது கொழும்புப் புதுக்கடை நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ மற்றும் எதிரணியின் உறுப்பினர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் முன்வைத்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் குறித்து அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது. பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பாதாளக் குழுக்கள் பணம் தூயதாக்கல், போதைப்பொருள் வியாபாரம், பல சட்டவிரோத செயற்பாடுகளுடன் தொடர்புடையது.

பாதாளக்குழுக்களில் ஈடுபடும் அல்லது ஒழுங்கமைக்கும் தரப்பில் பலர் இலங்கையில் இல்லை. விசாரணைகளை முன்னெடுத்துச் செல்கையில் பாதுகாப்புத் தரப்பின் ஒருசில அதிகாரிகள் பாதாள குழுக்களுடன் தொடர்பு கொண்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படை, பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவினைக் கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆகவே பாதாளக் குழுக்கள் குறித்து அரசாங்கம் விசேட அவதானம் செலுத்தியுள்ளது.

அனுமதிப்பத்திரமளிக்கப்பட்டத் துப்பாக்கிகளை மீண்டும் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒப்படைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தியா, துபாய் ஆகிய நாடுகளில் தலைமறைவாகியுள்ள பாதாளக் குழுவினரை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விசாரணை அனைத்தையும் பாராளுமன்றத்தில் குறிப்பிட முடியாது. பாதாளக் குழுவுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார். (ம-7)

## நெல்லியடியில் தொலைபேசி வயர்களைத் திருடியவர் கைது

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் தொடர்ச்சியாக தொலைபேசி இணைப்பு வயர்களை திருடி வந்த பிரதான சந்தேக நபர் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மாண்டான் பகுதியில் இடம்பெற்ற இத் திருட்டு தொடர்பில்

2024 ஆம் ஆண்டு தொடக்கம் 6க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த நெல்லியடிப் பொலிஸார் மண்டான் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடன் வாக்கு மூலம் பெறப்பட்டது. (ம-7,60)

### திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி

## அரச அதிபர் தலைமையில் முன்னாயத்தக் கலந்துரையாடல்

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு முன்னாயத்தக் கலந்துரையாடல் நேற்றுக் காலை திருக்கேதீஸ்வர ஆலய சம்பந்தர் மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணி சபையின் தலைவர் ராமகிருஷ்ணன், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச - தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகள், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது எதிர்வரும் 26 ஆம் திகதி இடம்பெறவுள்ள மகா சிவராத்திரி விழாவிற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொள்ளவுள்ள நிலையில் முன்னெடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது.

குறிப்பாக போக்குவரத்து ஒழுங்குகள், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், உணவு, பாதுகாப்பு, மருத்துவ வசதிகள் உள்ளடங்களாக முன்னெடுக்கப்பட வேண்டிய அனைத்து விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம்

## சாமர சம்பத் குற்றச்சாட்டு



(கொழும்பு)

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு பாரிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பாரிய நிதி ஒதுக்கப்படவில்லை.

அனைத்து மாகாணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும் என புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்றி உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் முதல் நாள் விவாதத்தில் உரையாற்று கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வரவு-செலவுத் திட்டத்தின் ஊடாக ஐசிங் பூசிய கேக்கினை முன்வைத்துள்ளார். குறிப்பிட்டுள்ள திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டும் இல்லையேல் பிரச்சினைகள் மாத்திரமே மிகுதியாகும்.

நலன்புரி கொடுப்பனவுகள் அதிகரித்துள்ளதை வரவேற்கிறேன். பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மஹாபொல கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

எமது அரசாங்கத்தில் முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் சம்பளம் 2000 ரூபாவால் அதிகரிக்கப்பட்டது. ஆனால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 1000 ரூபாய் மாத்திரமே அதிகரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய வாழ்க்கைச் செலவுக்கு இது போதுமானதல்ல.

வடக்கு மாகாண அபிவிருத்திக்கு 5000 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு பகுதியில் பால நிர்மாணிப்புக்காக 1000 மில்லியன் ரூபாவும் என்ற அடிப் படையில் 6000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ஏனைய மாகாணங்களுக்கு இவ்வாறு பாரிய நிதி ஒதுக்கப்படவில்லை. அனைத்து மாகாணங்களுக்கும் அபிவிருத்திக்கு சமமான வகையில் நிதி ஒதுக்க வேண்டும்.


மக்கள் தமது குறைகளை எங்களிடம் குறிப்பிடுகிறார்கள். அந்தக் குறைகளை நாங்கள் அரசாங்கத்திடம் குறிப்பிடுவோம். அந்தக் குறைகளுக்கு முறையான தீர்வினை பெற்றுக் கொடுக்காவிடின் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு ஏற்பட்ட கதியே இந்த அரசாங்கத்திற்கும் நேரிடும் என அவர் தெரிவித்தார். (நி-8)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(படம்:-மகாலிங்கம்)

# தொடரும் வரவு-செலவுத் திட்ட விவாதம்



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்றது.

இந்த நிலையில் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் 25 ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து குழு நிலை விவாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி, மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தின் மீதான வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3296

Search for people, places and things


### பபிஸ்ரன்




### ராங்கன்




### சியானி




### கண்ணா




### கஜனிகா




### கஜானி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பக்கத்தில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை, மகன்...

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு 10 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தந்தை, மகன் மற்றும் மகள் மீது இனந்தெரியாத நபர்கள் சிலர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் 39 வயதுடைய தந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த 6 வயதுடைய மகள் தங்காலை வைத்தியசாலையிலும், 9 வயது மகன் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

எனினும், அவர்கள் இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## கட்டுப்பணங்...

காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை அந்த நபர்கள் சமர்ப்பித்தால், அவர்களுக்கு அப்பணம் மீளளிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பணத்தை வைப்புச் செய்த பற்றுச்சீட்டின் மூலப்பிரதி, வைப்புப்பணம் மீளளிப்புச் செய்வதற்கான விண்ணப்பக் கடிதம் ஆகியவற்றை கட்டுப்பணத்தை வைப்புச் செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.(ம-7)

## எஸ்.பி.சாமி...

தினக்குரல் பத்திரிகையின் ஸ்தாபகரும் திருநெல்வேலி நொதேண் சென்றல் வைத்தியசாலையின் நிறுவுனருமான எஸ்.பி.சாமி (வயது-89) நேற்றிரவு 9.30 மணியளவில் யாழ்ப்பாணத்தில் காலமானார்.

வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட எஸ்.பி.சாமி சமூக மற்றும் சமயப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சட்டத்தரணிகளை...

பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் உள்ள புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் உள்ள 5ஆம் இலக்க நீதவான் நீதிமன்றத்தில், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் சந்தர்ப்பத்தில் பதில் பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி, நீதிமன்றங்களுக்குள்ளும் ஆயுதமேந்திய அதிகாரிகளை பணியில் ஈடுபடுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொள்வதாகப் பதில் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார். (ம-7)

## நீதிமன்றினுள்...

வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வான் ஒன்றில் தப்பிச் செல்லும்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், இராணுவ கமாண்டோ படையணியின் முன்னாள் சிப்பாய் எனத் தெரியவந்துள்ளது. (ம-7)

## பாதாள குழுத்...

கொழும்பு, புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகத் தலைவர் கணேமுல்ல சஞ்சீவ படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வழக்கு ஒன்றின் விசாரணைக்காக நேற்று அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தும் நடவடிக்கையின்போது, சட்டத்தரணி போல் வேடமணிந்து வந்த நபரினால் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகளின் மேசையில் அமர்ந்திருந்த சந்தேகநபர், எதிரிக் கூண்டில் நின்ற கணேமுல்ல சஞ்சீவ மீது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கணேமுல்ல சஞ்சீவ, கொழும்புத் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

நேபாளத்திலிருந்து 2023ஆம் ஆண்டு செப்ரெம்பர் 13ஆம் திகதி நாடு திரும்பியதும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சஞ்சீவ கைது செய்யப்பட்டார்.

பின்னர் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தின் உத்தரவின்பேரில் கடந்த வருடம் ஜூன் மாதம்பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

கணேமுல்ல சஞ்சீவவைப் படுகொலை செய்வதற்கு சட்டத்தரணி போல் வேடமணிந்த பெண்ணொருவரும் உடந்தையாக செயற்பட்டுள்ளமை பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சட்டத்தரணிகள் போல் வேடமணிந்து வந்த இருவர் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை புத்தகத்தினுள் கைத்துப்பாக்கியை மறைத்து வைத்தே நீதிமன்றினுள்சென்று துப்பாக்கிச் சூட்டினை நடாத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம்தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு உள்ளிட்ட 5 விசேட குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன. (ம-7)

# காங்கேசன்துறையில்

# உப்பு உற்பத்தி நிலையம் அடுத்த மாதம் ஆரம்பம்



(கொழும்பு)

காங்கேசன்துறையில், அடுத்த மாதம் உப்பு உற்பத்தி நிலையமொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றிய அவர், எதிர்வரும் வருடத்தில் நாட்டில் நூற்றுக்கு 70 சதவீதமான உப்பு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இரண்டு உப்பு உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும். அதற்குத் தாம் உறுதியளிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தற்போது உப்புத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ளோம். அதனை நாம் நிவர்த்தி செய்ய வேண்டும்.

இதற்காக உப்பு நிறுவனங்களை அமைக்கவுள்ளதாகக் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 5752
H 3 2 0 2 7 3
அத சம்பத H 0 2 7 3
சீட்டிழுப்பு இலக்கம் 0327
National Lotteries Board

தன நிதானய
திகதி 2025.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 1782
M 06 07 08 39 M
85236

மெகா பவர்
திகதி 19/02/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2100
D 10 05 27 33 78

ஜய ஜய
திகதி 2025.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 0020
I 1 9 6 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3994
சீட்டிழுப்பு திகதி 19.02.2025
K 01 05 57 71
K

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.02.19
சீட்டிழுப்பு இலக்கம் 1061
மிதுனம் 27 48 53 56 மிதுனம்
14159 25

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.02.2025 வெற்றி வாரம் 460
N 0 7 0 0 5 6
62087
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.31,458,014.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2726
சீட்டிழுப்பு திகதி 2025.02.19 தினம் புதன்கிழமை
02 34 45 48 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.87,227,542.40

சனிதா
திகதி 19.02.2025 வெற்றி வாரம் 4887
09 29 49 73 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,022,916.40
66270

ஜயோதா Jayoda
திகதி 2025.02.19 வெற்றி வாரம் 2105
14 18 49 62 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,960,075.60

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4438
சீட்டிழுப்பு திகதி 19.02.2025 தினம் புதன்கிழமை
16 27 29 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.12,984,676.00
207244

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 28 06 09 58 62
1902
19.02.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.565,870,919.20

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2552
சீட்டிழுப்பு திகதி: 2025.02.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,023,768.00
02 09 14 43 T
806229


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2297)

076 825 7716 (ஆகாஸ்)

## 9ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம் 06 . 05 . 1989

மறைவு 20 . 02 . 2016

அமரர்
### தெய்வேந்திரன் பகீசன்

பிறப்பின் உன்னதங்களை உணர முன்பே
இறப்பின் வலியை தந்தாய்
துயரம் தோய்ந்த காலத்தின் ஆக்கிரமிப்பு
இன்னும் அகலவில்லை. (3465)

தாரணி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

குடும்பத்தினர்

# செம்மணி மனிதப் புதைகுழி நீதவான் இன்று பார்வையிடுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப்புதைக்குழியை இன்றைய தினம் யாழ்ப்பாண நீதிமன்ற நீதவான் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் பகுதியிலுள்ள இந்து மயானத்தில் தகன மேடை அமைப்பதற்காக வெட்டப்பட்ட இடத்தில் மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸாரால் நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்குக் குறித்த இடத்தை நீதவான் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பொதுக்கூட்டம்

யாழ் மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
மேற்படி சங்க அலுவலகத்தில் அவசர கலந்துரையாடல் இருப்பதால் இன்று 20.02.2025 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் தவறாது கலந்து கொள்ளுமாறு அனைத்து அங்கத்தவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

(C-2299) தலைவர்

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும். (3468)

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
076 314 4689,
076 008 6961, 077 844 9861

# விசேட வர்த்தமானி

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் தொடங்குவது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற உறுப்பினரின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூன் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாக வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்பின் 252 ஆம் அத்தியாயத்தின் உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 10 இன் துணைப்பிரிவு (1) இன் பிரகாரம் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் இவ் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (ம-7)

STUDY IN UK
CANADA / AUSTRALIA / FRANCE / SWITZERLAND




IELTS
(867)
Mrs S.Mayuri (BA Eng.Lit) அவர்களின்
Life Skills A1/A2
திருமணமாகி UK செல்பவர்களுக்கானது
WEC COLLEGE
யாழ்ப்பாணம் ஆரியகுளம் (புதிய உயர்கல்லூரி வளாகம்)
சாவகச்சேரி சங்கத்தானை (இந்துக் கல்லூரி அருகே)
0779265447/ 0217200989

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2298)

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 22.01.2025 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் சபாபதிப்பிள்ளை நித்தியானந்தன்

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 21.02.2025 நாளை வெள்ளிக்கிழமை காலை 11.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தோற்றம் 30.06.1958

மறைவு 22.01.2025

(C-2296)

செட்டிவளவு,
இணுவில் மேற்கு, இணுவில்.

T.P : 077 290 2572

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org